**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 298/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | **அ.சா.1** |
| Name | : | **திருமதி. பாண்டிச்செல்வி** |
| Father's Name/Husband Name: | | **திரு. ராஜா** |
| Village | : | கிருஷ்ணாபுரம் |
| Taluk | : | **வேப்பந்தட்டை** |
| Age | : | 39/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11.11.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி ஆஜர் இல்லை. அவருக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருக்கிறேன். ப.சா.2 கேசவன், ப.சா.3 கார்த்திக், ப.சா.4 பூங்கொடி ஆகியோரைத் தெரியும். எதிரி கருணாநிதியைத் தெரியும். கடந்த 20.02.2025 அன்று மாலை சுமார் 5.30 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தபோது எனக்கும் எதிரி கருணாநிதிக்கும் இடையே வாய் தகராறு ஏற்பட்டது. நான் கீழே விழுந்துவிட்டேன். எதிரி என்னை தகாத வார்த்தைகளால் பேசவில்லை. எதிரியல் எனக்கு காயங்கள் ஏதும் ஏற்படவில்லை. எதிரி என்னை கொலைமிரட்டல் விடுக்கவில்லை. நான் கீழே விழுந்த காரணத்தினால் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். எதிரி மீது புகார் வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான். அந்த **வாக்குமூலம் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தற்போது நான் சமாதானம் ஆகிவிட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர். போலிசார் விசாரித்த போது தற்போது கூறிய விவரத்தை தான் கூறினேன்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

தற்போது நானும் எதிரியும் சமாதானமாகி சமாதான மனுவில் கையொப்பம் செய்து தாக்கல் செய்துள்ளேன். போலிசார் என்னை விசாரித்தனர் என்றும், கடந்த 20.02.2025 அன்று மாலை 5 மணியளவில் நான் என் வீட்டு சமையலறையில் உள்ள போது எதிரி என் வீட்டு கேட்டினை பிடித்து ஆட்டிக்கொண்டு தகாத வார்த்தைகளால் பேசினார் என்றும், அது குறித்து கேட்ட என்னை எதிரி தகாத வார்த்தைகளால் பேசி என் வீட்டிற்குள் அத்து மீறி நுழைந்து என் கையை பிடித்து இழுத்து கீழே தள்ளி என்னை அடித்தார் என்றும் அருகிலிருந்த சாட்சிகள் கேசவன், பூங்கொடி மற்றும் கார்த்திக் ஆகியோர் காப்பாற்றினார்கள் என்றும் வெளியில் சென்ற எதிரி கீழே கிடந்த குச்சியைக் காட்டி கொலைமிரட்டல் விடுத்தார் என்றும், நான் மருத்துவனையில் சிகிச்சையில் இருந்த போது போலிசாரிடம் எதிரி மீது புகார் வாக்குமூலம் அளித்தேன் என்றும் அதற்கு ஆதரவாக வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் அவரை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.